அரிய சந்தர்ப்பம்
மலிவு விலையில்
TATUNG—12" டெலிவிஷன்செற் BOOSTER இல்லாமல் இயங்கக் கூடியது. ARIEL குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும்
குறிப்பு: டெலிவிஷன் காட்சி தினசரி 6-30க்கு மேல் காண்பிக்கப்படும்.
விநியோகஸ்தர்கள்:
லிடன் ரேடர்ஸ்:
சேகரம் கட்டிடம்
188/3 (74) ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம். போன்: 693

பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No QB/89/5/78

மலர்: 21 வைகாசி: 18 றஜப்: 5 இதழ்: 111
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 1-6-79

இறக்குமதி செய்யப்பட்ட
ஃ பலவித பரிசுப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், தையல் வேலைகளுக்குரிய சகல பொருட்கள்.
மற்றும்
ஃ [யப்பான்] நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பலதரங்களிலுமுள்ள காதுகேட்கும் கருவிகள் யாவற்றையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
கிருபா கிவ்ற் கவுஸ்
KIRUBA GIFT HOUSE,
சோதிட விலாஸ் கட்டிடம்
46, பெரியகடை - யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8083

# தனிப்பட்ட இன-குடும்ப ரீதியில் பாகுபாடின்றி சகல பகுதியும் அபிவிருத்தி செய்யப்படும்

## பால்மா தொழிற்சாலையில் பெரும் தீ விபத்து
### ரூபா 15 கோடி நஷ்டம்

[கொழும்பு]

வெலிசறை பால்மாதொழிற்சாலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தினால் 15 கோடி ரூபா பெறுமதியான 'லக்ஸ்பிறே' பால் மாவும் இயந்திரங்களும் சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் மாலை எரிய ஆரம்பித்த தீ இன்று வரை எரிந்துகொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

இவ்விபத்துக்கான காரணம் பற்றி இரகசியப் பொலிஸார் புலன்விசாரணை நடத்திவருகின்றனர்.

10 லட்சம் ரூபா பெறுமதியான பக்கட்டில் அடைக்கப்பட்ட 'லக்ஸ்பிறே' பால் மாவும் 5 கோடி ரூபா பெறுமதியான பக்கட்டில் அடைக்கப்பட இருந்த பால் மாவும் இவ்விபத்தில் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அடுத்த மாத 'லக்ஸ்பிறே' விநியோகத்தில் எதுவித பாதிப்பும் ஏற்படாது என்று வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

## வவனியா இளைஞர் மரணம்: சந்தேகநபர்களை கைதுசெய்ய பொலிசாருக்கு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பலத்த காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வவனியா இளைஞர் ஒருவர் மரணமானார்

வவனியா பம்பமடுவைச் சேர்ந்த கனகசிங்கம் கமலகுமாரனின் [வயது 18] மரண விசாரணையை யாழ். பதில் நீதவான் திரு எஸ். எஸ். பிரான்சிஸ் நடத்தினார் இறந்தவரின் தந்தை கார்த்திகேசு கனகசிங்கம் சாட்சியமளிக்கையில் பம்பமடுவில் வசிக்கும் ஒரு சிலர் பஸ்ஸில் பிரயாணம் செய்தபோது தாம் இறங்கவேண்டிய இடத்தில் பஸ் நிற்காததால் ஆத்திரமடைந்து வீதிக்குக் குறுக்காக தடைபோட்டதால பஸ் சேவை நிறுத்தப்படலாம் என் றஞ்சிய அப்பகுதி மக்கள் அவர்களிடம் சென்று முறையிட்டபோது ஆத்திரமடைந்த சின்னமணி, குருநாதன் ஆகியோர் காலஞ்சென்றவரைப் பிடித்திருக்க இளியன் இரும்புக் கம்பியால் தாக்கியதாகவும் தனக்கும் கம்பியால் எறிந்து காலில் காயம் ஏற்படுத்தியதாகவும் தெரிவித்தார்.

காயங்களுடன் காலஞ்சென்றவரை வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதித்தபோது அவர்கள் யாழ் ஆஸ்பத்திரிக்கு மாற்றியதாகவும் இங்கு மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் மூவரையும் உடனடியாக கைது செய்யுமாறு பதில் நீதவான் திரு. பிரான்சிஸ் வவனியா பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார், (ஜ)

அறிவித்தல்
ஸ்ரீ தாமோதரவிலாஸ்
இன்று திறக்கப்படமாட்டாது
உரிமையாளரின் சகோதரர் காலமானதையொட்டி, எமது வர்த்தக நிறுவனம் இன்று (1-6-79) வெள்ளிக்கிழமை மட்டும் விற்பனைக்கு திறக்கப்படமாட்டாது என வருத்தத்துடன் அறியத் தருகிறேன்,
வே, க. தம்பிமுத்து,
239, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7065 2630

## குறைகளைச் சொன்னால் தீர்த்து வைப்போம்
### மாநகராட்சி உறுப்பினர்கள் மத்தியில் ஜே. ஆர். உரை

(கொழும்பு)

தனிப்பட்டவர்களினதோ அன்றி ஒரு குடும்பத்தினதோ நலன்களைப் பேணுவதற்கோ ஒரு இனத்தை அல்லது சமயத்தைச் சார்ந்தவர்களுக்குச் சேவையாற்றுவதற்கோ மக்கள் அரசாங்கத்திற்கு அங்கிகாரமளிக்கவில்லை. இந்நாட்டு மக்கள் சகலருக்கும் சேவையாற்றவே மக்களின் பிரதிநிதிகள் எல்லோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற நகர நிர்வாகம் தொடர்பான கருத்தரங்கில் பேசுகையில் கூறினார்

பிரதமர் திரு ஆர். பிரேமதாசா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் சபாநாயகர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், எம், பிக்கள், அரசாங்க அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட திரு ஜெயவர்த்தன மேலும் கூறியதாவது;-

அரசாங்க எம். பி பிரதிநிதித்துவப்படுத்துப்தொகுதி என்றாலும்சரி, எதிர்க்கட்சித் தொகுதி என்றாலும் சரி இந்த நாட்டின் சகல பகுதிகளையும் அபிவிருத்தி செய்வதே அரசின் நோக்கம்,

எனவே மக்களின் பிரதிநிதிகள் குறிப்பிட்ட இன, மத மக்களுக்குச் சேவை புரியாமல் சகலருக்கும் சேவை புரிய முன்வரவேண்டும்

சபையில் அமர்ந்திருந்த சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினத்தைப் பார்த்து ஜனாதிபதி பின்வருமாறு குறிப்பிட்டார்

இந்தியாவில் என்னை சிலர் ஜயவர்தனம் என்று குறிப்பிடுகிறார்கள் - தமிழில் நவரத்தினம் என்பதை சிங்களத்தில்

[6ம் பக்கம் பார்க்க]

## அமெரிக்கா செல்லும் குழுவில் எதிர்க்கட்சியினருக்கும் சமபங்கு இருக்கவேண்டும்
### மாசாச்சுசெட்ஸ் மாநிலத் தலைவர் ஜே. ஆருக்கு தந்தி

(கொழும்பு]

இலங்கை அரசு மாசாச்சுசெட்ஸ் மாநிலத்திற்கு அரசாங்கப் பிரதிநிதிகள் குழுவொன்றை அனுப்புமிடத்தில் அக்குழுவில் எதிர்த்தரப்பினரும் அங்கம் வகிக்கவேண்டுமென அம்மாநிலச் சட்டசபையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் உதவித் தலைவர் திரு ஹாரிஃப் ஹேவே இலங்கை ஜனாதிபதிக்கு தந்தியொன்றை அனுப்பியிருக்கிறார்

உங்கள் அரசின் உத்தியோக குழுவொன்றை மாசாச்சுசெட்ஸ் மாநிலத்திற்கு அனு

6-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் அமெரிக்க ஆராய்ச்சியாளர்

(நெல்லியடி)

அமெரிக்காவிலிருந்து இலங்கை வந்துள்ள திரு. றொபேர்ட் என்பவர் தமிழர் விடுதலை கூட்டணிப் பாராளுமன்ற பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடிவருகின்றார்

அரசியல் விஞ்ஞானத்தில் ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ள இவர் தமது ஆராய்ச்சியின்பொருட்டே கூட்டணி எம் பிக்களைச் சந்தித்துவருவதாகத் தெரிகிறது

திரு. றொபேர்ட் அண்மையில் உடுப்பிட்டிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு த இராசலிங்கத்தின் இல்லத்திற்கும் விஜயம் செய்திருந்தார்.

## யாழ். புதிய மேயர் இன்று பதவியேற்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகராட்சி மன்றத்தின் புதிய முதல்வர் திரு இராசா விசுவநாதன் இன்று பகல் 12-52 மணிக்கு தமது கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார்

முதல் நிகழ்ச்சியாக யாழ் மாவட்ட நீதிமன்றத்துக்குச் சென்று, யாழ் மாவட்ட நீதிபதி திரு நிகால் திஸநாயக்கா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்வார் அதனைத் தொடர்ந்து யாழ். மாநகராட்சி மன்றத்தின் வெளிவாயிலில் வைத்து ஆணையாளர் திரு கே சிவஞா

(6ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கிளிநொச்சி கனகபுரம் கோழிப்பண்ணை றோட்டில் அம்பாள் குளத்திற்கு அண்மையில் இரண்டு ஏக்கர் காணி [1 ஏ. தென்னந் 1 ஏ. தோ.காணி] கிணறு, சிறிய வீடு உட்பட விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு N. நடா [அருள்] கனகபுரம் வித்தியாலயத்திற்கு அருகாமை, கனகபுரம், கிளிநொச்சி. 2615

1975 மொடல் பியற் 128 கார் இங்கிலாந்திலிருந்து இறக்குமதியானது. நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. க. தர்மலிங்கம், தாவடி தெற்கு, கொக்குவில். 2619

### வகுப்புகள்

P. M. G's Certificat (Special) ஐப்பசி மாத பரீட்சைக்கான துரித வகுப்புகள் இலேப்பாறிய றேடியோ ஆசிரியரால் ஆனிமாதம் 6ம் திகதி ஆரம்பிக்கப்படுகின்றன. விபரங்கள் நேரில் ஞானம் 37, குமாரவீதி, நல்லூர். 2624

### WANTED

Managers, Assistant Managers, Barkeepers Cooks and Waiters Apply P Gritharan, 231, PointPedro Road, Nallur, Jaffna. 2617



நல்லூர்

ப. நோ. கூ. சங்கம்

## கேள்விப் பத்திரம்

எமது சங்கத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் பொருட்கள் விற்பனைக்குண்டு. மீளப் பெற்றுக் கொள்ளக்கூடிய கேள்விப் பத்திர வைப்புப்பணமாக ரூபா 500/- செலுத்திக் கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 7-6-79 பி. ப. 3-00 மணி வரை வழங்கப்படும். 8-6-79ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்

| | |
|---|---|
| வெற்றுச்சாக்கு- | |
| 2½ புசல் சாக்கு | — 4896 |
| 2 அந். சீனி | — 419 |
| 1 அந். சீனி | — 279 |
| 150 ரு. மா | — 519 |
| 112 ரு மா | — 121 |
| சில்லறை | — 558 |
| உப்பு | — 199 |
| கழிவு | — 103 |
| காட்போட்பெட்டி | — 400 |
| மரப்பெட்டி | — 38 |
| வெற்று பரல் (45 கலன்) | — 100 |
| காலங்கடந்தஉரம் | — 135 அந். |
| வெற்று சீமெந்து பைக்கற் | — 500 |

மேற்படி பொருட்களை தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். ஒவ்வொரு பொருட்களுக்கும் தனித்தனியாகவும் விண்ணப்பிக்கலாம். கேள்விப் பத்திரத்திற்கு ரூபா 2/-செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்
நல்லூர்
ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

2610


## சுதுமலை அம்பாள் கைலாச வாகனத்தில் திருவுலா

[யாழ்ப்பாணம்]

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் இன்று புதிய கைலாச வாகனத்தில் பவனி வருவார். அம்பாளின் ஒன்பதாம் திருவிழாவான இன்று பகல் அம்பிகைக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும். இரவு கைலாசவாகனத்தில் அம்பாள் திருவுலா வருவார் இவ்வாகனம் நுண்கலைச் செல்வம் கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் குரும்பசிட்டி கலாகேசரி கலாலயத்தினரால் உருவாக்கப்பட்டதாகும்.

இன்றையதிருவிழாவில் 'அம்பிகையின் அருள் வெள்ளம்' என்னும் பொருள்பற்றிப் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சொற்பொழிவு நிகழ்த்துவார். (அ)

## திருவிழா

[யாழ்ப்பாணம்]

தொல்புரம் மத்தி கொட்டடி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெறுகின்றது.

இம் மாதம் 10ந் திகதி காலை அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும், அம்பாள் வீதிவலம் வருதல் தீர்த்த உற்சவமும் நடைபெறும் மறுநாள் இரவு அம்பாளை ஊர் எங்கும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

உற்சவத்தை முன்னிட்டு தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலை உறுப்பினர்கள் ஆலயத்தில் பல வேலைகளைச் சிரமதான மூலம் செய்துள்ளனர்

உற்சவத்தில் தினமும் சமயச் சொற்பொழிவுகளும், பஜனை கூட்டுப்பிரார்த்தனைகளும் இடம் பெறவிருக்கின்றன

## ஈரானில் வீதிச் சண்டை

## 21 பேர் பலி!

தெஹ்ரான், மே 31

ஈரானில் குரம்ஷர் மாவட்டத்தில் கடந்த இரவு நடைபெற்ற வீதிச் சண்டையில் 21 பேர் பலியாகினர் என்றும் 75 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

அரபு தேசியவாதிகள் என்று தம்மைக் கூறிக் கொள்ளும் ஒரு கோஷ்டியினருக்கு இஸ்லாமிய சமயத்தலைவர் அயத்தொல்லா கொமேனியின் ஆதரவாளர்களுக்குமிடையே இச்சண்டை நடைபெற்றது.

நேற்று குசெஸ்தான் துறைமுகநகரில் நடைபெற்ற கலவரங்களை அடுத்து அங்கு அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இக்கலவரத்தில் 40 பேர் இறந்துள்ளனர் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. [இ]


PART-I EXAMINATION OF THE INSTITUTE OF CHEMISTRY DECEMBER - 1980
B. Sc [General] DEGREE STANDARD

பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்ட இரசாயனவியலில் ஆர்வமுடையவர்கள் தொழிற்துறைகளில் ஈடுபட்டிருந்தாலுங்கூட, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி பரீட்சைக்குத் தங்களை தயார்படுத்திக் கொள்வதற்கான விபரங்களுக்கு கடிதமூலம் மட்டும் உடன் தொடர்பு கொள்ளவும்.

529, கே. கே. எஸ். றோட் — யாழ்ப்பாணம். 2621



## புனித கென்றியரசர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

மேற்படி சங்கத்தின் அங்குரார்ப்பணப் பொதுக் கூட்டம் யூன் மாதம் 2-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் யாவரும் இக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு தயவன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அதிபர்

2625



## பாம் பீச் ஹொட்டல்

யாழ்நகரிலுள்ள ஒரே பீச் ஹொட்டல், நவீன வசதியடங்கிய அறைகள், உணவு, உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கலாம். நீச்சல் தொட்டிகள், இரவு - பகல் சேவை.

விபரங்களுக்கு:

ப. கிரிதரன் (செயலாளர்)

பாம் பீச் ஹொட்டல், வளலாய், அச்சுவேலி.
231, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
2618






## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: MB/169

1. ஆறுமுகம் முருகேசம்பிள்ளையும்
2. ஞானதேவியும் இருவரும் தற்போது சூடான் இவர்களின் தத்துவகாரன் இராமநாதர் முருகேசு காரைநகர் கிழக்கு.

வழக்காளிகள்

எதிராக

1. இல. 161/4, அரசடி றோட், 3ம் ஒழுங்கை. யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மாணிக்கம் தெய்வேந்திரம் கைம்பெண் சிவமணி. இவர் காலஞ்சென்ற மாணிக்கம் தெய்வேந்திரத்தின் சொத்திற்குச் சட்டப்பிரதிநிதி.

எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் MB/169ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னும் விபரிக்கப்படும் துண்டுக்காணிகள் 1979ம் ஆண்டு ஆனிமாசம் 15ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்குறித்த எதிராளி வழக்காளிகளுக்கு ரூபா7000/-மும் மேலும் ரூபா 3500/-க்கு தீர்வைத் திகதியாகிய 1977ம் ஆண்டு மாசி மாதம் 15ந் திகதியிலிருந்து முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு 9% வட்டியும் வழக்குச் செலவு ரூபா 725/39ம்.

ஆதனடாப்பு

வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கும் பிரிவும், வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை வட கிழக்கு இறை:- "நீர்நொச்சியடியும் கட்டைக்காடும்" நி.ப. 1ம் குளி 9ம் அதற்குரிய பயிர்வகைகளும். எல்லை கிழக்கு விஜய வல்லிபுரத்தின் ஆதனம், வடக்கு இளையவி மாணிக்கத்தின் உரிமைக்காரரின் ஆதனம், மேற்கு கையொழுங்கை, தெற்கு இளையவி சின்னத்தம்பியின் ஆதனம், பதிவு இலக்கம் டி 275/298. இக்காணி 1ம் ஈடாகக் கொடுக்கப்பட்டது.

2. ஷெ வண்ணார்பண்ணை வடகிழக்கிலுள்ள மேற்படி "நீர்நொச்சியும் கட்டைக்காடும்" நி. ப. 1ம் குளி 16,26/32ம் வீடும் கிணறும், எல்லை கிழக்கு இளையவி பழனித்துரையின் ஆதனம், வடக்கு இதன் மிகுதியாதனம் இது நவரத்தினம் பெண் மலருக்குரியது; மேற்கு ஒழுங்கை, தெற்கு காணும் றோட்டும் இதில் பிரிவிடப்படாத விரைப்பங்கும். இந்த ஆதனம் 2ம் ஈடாகக் கொடுக்கப்பட்டது.

மு. நவரத்தினராசா,
விற்பனை ஆணையாளர்,
யாழ். மாவட்ட நீதிமன்றம்.

கமலபதி,
ஆஸ்பத்திரிவீதி,
ஸ்லைடதீவு.

2614

## அனைத்து உலக சிறுவர் ஆண்டு

# சிறுவர் உரிமை சாஸனமும் அதன் நோக்கங்களும்

அனைத்து உலக சிறுவர் ஆண்டாக இந்த ஆண்டினை ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்துள்ளது.

வளர்முக நாடுகளில் குழந்தைகளின் தேவைகளை பொது மக்கள் நன்கு உணரும்படி செய்வதும், அந்த நாடுகளின் தேசிய முதலீடுகளில் குழந்தைகளின் தேவைகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடுகளை ஏற்படுத்தச் செய்வதும் இதன் பிரதான நோக்கங்களாகும்.

உலகில் மிக ஏழ்மை நிலையிலுள்ள 60 நாடுகளில் 16 வயதுக்குக்குறைந்த 50 கோடி சிறுவர்கள் இந்த ஆண்டில் இருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

சிறுவர் உரிமை சாசனத்தை ஐக்கியநாடுகள் சபை பிரகடனம் செய்த 20வது ஆண்டும் இதுவாகும். 1959ம் ஆண்டு பிரகடனம்செய்யப்பட்ட இதன் நோக்கங்கள் இப்பொழுதுதான் ஓரளவு ஆக்கரீதியாக செயல்பட ஆரம்பித்துள்ளன என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

### பல்லாயிரம் குழந்தைகள்

உலகில் இன்னமும் பல்லாயிரம் லட்சம் குழந்தைகள் தினமும் ஒருவேளை உணவும் கிடைக்காமல் துன்பத்தில் உழல்கின்றார்கள். மிக அத்தியாவசியமான ஆரம்ப சுகாதார கல்விவசதிகளும் கூட இவர்களுக்குக் கிடைப்பதில்லை.

இதைவிட புயல், வெள்ளப் பெருக்கு, வரட்சி, பூகம்பம், அல்லது குண்டு வீச்சு, விஷவாயு பரவுதல், தொற்று நோய் போன்ற அழிவுகளில் முதலில் பாதிப்புக்குள்ளாகிறவர்கள் சிறுவர்களாகவும், குழந்தைகளாகவுமே இருக்கிறார்கள்.

இந்த ஏழைநாடுகளில் வருடாவருடம் பிறப்புவிகிதமும் அதிகரிப்பதனால் மேற்கூறிய நிலைமை மேலும் மோசமடைந்து வருகின்றது.

### சிறுவர் உரிமை சாஸனம்

1959ம் ஆண்டு நவம்பர் 20ம் திகதி ஐக்கியநாடுகள் பொதுச்சபை சிறுவர் உரிமைகள் சாஸனத்தை ஒருமனதாக ஏற்றுக்கொண்டது.

மனித இனம் குழந்தைகளுக்கான தன் கடமையை சிறப்பாக நிறைவேற்றவேண்டும் என்று அந்த சாசனத்தின் முன்னுரையில் கூறப்பட்டுள்ளது.

கூறப்பட்டுள்ள உரிமைகளை முழுமையாக அனுபவிக்கவும்,

(2 ஒரு ஆரோக்கியமான சாதாரணநிலைமையில் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கு விசேஷ பாதுகாப்பும் சந்தர்ப்பங்களும் வசதிகளும் கிடைக்க வழிசெய்யவும்,

(3) ஒரு பெயரும், ஒரு நாடும், அவர்களுக்கு உரித்தாகவும்,

(4) போதுமான அளவு போஷாக்கு, வீட்டுவசதி, பொழுதுபோக்கு, மருத்துவ சேவைகள் உட்பட சமூகப் பாதுகாப்புக்கள் கிடைக்கவும்,

(5) வலதுகுறைந்தவராயின் விசேஷ சிகிச்சையையும், கல்வியும் பாதுகாப்பும் பெறவும்,

(6) பாசமும் பாதுகாப்பும், அன்பும், புரிந்துகொள்ளும் தன்மையுமுள்ள சூழ்நிலையும் சாத்தியமாகும்போதெல்லாம்

[5ம் பக்கம் பார்க்க]

### -வர்ணம்-

குழந்தையின் உடலும் உள்ளமும் பக்குவமுறாமலிருப்பதனால் குழந்தை பிறப்பதற்கு முன்பும் பிறந்த பின்பும் விசேஷ கவனமும் பாதுகாப்பும் அதற்குத் தேவைப்படுகின்றது. எனவே இந்த உரிமைகளை சட்டரீதியாகவும் வேறு வழிகளிலும் பெற்றுக்கொடுப்பதற்கு சகலரும் முயற்சி எடுக்க வேண்டும் என்று அம்முன்னுரை மேலும் வலியுறுத்துகின்றது. அந்தப்பிரகடனம்பின் வரும் அம்சங்களை சிறப்பாக வலியுறுத்துகின்றது.

(1) இன, நிற, பால், சமய, தேசரீதியில் பாகுபாடின்றி பிரகடனத்தில

## அராலி முத்துமாரி அம்மன் இன்று உற்சவாரம்பம்

சிவாஜி மன்னன் இந்தியாவில் ஆட்சிசெய்த காலம் அது. அராலிக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் வலையில், ஒரு சிலம்பும் பிரம்பும் அகப்பட்டது அம்மீனவருக்கு தன்னையறியாமலே ஒருவித பயம்தூண்ட அவற்றை அக்கடற்கரைப் பக்கத்துள்ள நொச்சிக்காடு என்னுங் குறிச்சியிலுள்ளவர்களிடம் கையளித்தார். அவர்கள் அவற்றைவெளியே வைத்துப் பூசித்து வந்தார்கள். கிராமம் முழுவதும் கொள்ளை நோய் பரவிப் பலியெடுக்கத் தொடங்கியது இவர்கள் பயத்தினால் செய்வதறியாது அராலி கிழக்கில் பெரிய சோதிடராகவும், மாந்திரிகராகவும், தெய்வபக்தி மேம்பாடானவராகவும், விளங்கிய பெரியசாமிச் சாஸ்திரியாரிடம் கொண்டு சென்று காட்டி செய்வகை வினவினர். அவர்கள் அதற்கு "நீரில் வந்ததை நீரிலேயே இடவேண்டும்" எனக்கூறி ஒரு சுபதினமமைத்து அன்று மன்னரவைக் கூட்டங்களுஞ் சூழ இந்நாவலடியில் நின்றே ஒரு எலுமிச்சம் பழத்தை உருட்டிவிட்டார். அது தற்போது மூலப்பீடமமைந்துள்ள இடத்தில் போய் நின்றது. அந்த இடத்தில் மிக ஆழத்திற்குக் குழிதோண்டச் செய்து அக்குழியில் இச்சிலம்பு பிரம்புகளையிட்டு மூடி அதன்மேல் பீடமமைத்து அதற்குக் கோவிலுமமைக்கப்பட்டது அந்தப் பீடமே இப்பொழுதும் நாம் சிலைவைக்காது அம்பாளை உருவேற்றி வணங்கும் பீடம் அந்த ஆலயமே இது

பண்டைய தமிழ் மன்னர்கள் கனவேள்வி செய்து துர்க்கா வணக்கம் புரிந்த தலம் இதுவே. ஈழத்தமிழ் மன்னரன்றித் தென்னக வேந்தரும் வழிபட்டு அருள்மிகப்பெற்ற தலமும் இதுவேயாகும். ஈழத்துச் சிங்கள மன்னரின்மேல் சோழபாண்டிய மன்னர் அடிக்கடி படையெடுத்து வந்து வெற்றிவாகை சூடி ஈழத்தை ஆட்சி புரிந்தமையை நாம்

(4-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### மூளாய் கூ. ஆஸ்பத்திரி வளர்ச்சிக்கு உதவுக

தியாகமும் தொண்டும் பொருந்திய கொடை வள்ளல்களின் உள்ளத்தில் உதித்து உருவம் பெற்று விருட்சம் போல் வளர்ந்து பலஆண்டு காலமாய் பல்லாயிரக் கணக்கான வடபகுதி மக்களின் துன்பத்தைத் துடைத்து, துயரை நீக்கி வாழ வைத்ததுதான், மூளாயில் காட்சி அளிக்கும் கூட்டுறவு வைத்தியசாலையாகும். நிர்வாகச் சீர்கேட்டால் இப் புகழ் பெற்ற ஸ்தாபனம் மூடப்பட்டு விடுமோ என்ற அச்சம் மக்கள் மனதில் தோன்றி பீதி அடைந்தார்கள். இதன் காரணமாகத்தான் பத்திரிகைகளில் சிலர் எழுதத் தொடங்கி, அங்கத்தவர்களின் ஊக்கத்தால் உற்சாகம் கொண்டு, தற்போதைய மூன்று அங்கத்தவர் கொண்ட இயக்குநர்சபையினர் இரவும்பகலும் அயராது உழைத்து முன்னேற்றப் பாதையில் செல்ல வழி வகுத்தது ஒரு மாபெரும் சாதனையாகும்.

திறமை வாய்ந்த வைத்திய கலாநிதிகளும், நிபுணர்களும் அன்பு ஆதரவுடன் சிகிச்சை கொடுப்பதை மக்கள் கண்ணுரக் காண்கிறார்கள். இதற்கு ஆதரவாய் தாதிமார்களே, தாதிமார்கள், உதவியாளர்கள், மற்றும் கடமையாற்றும் அனைவரும் மிக உன்னதமான ஒத்துழைப்பை நல்கி பணி புரிவதை அவதானிக்கலாம். இதன் பயனை நாள்தோறும் பல பகுதிகளிலிருந்து வரும் நோயாளரின் எண்ணிக்கை பன்மடங்கு பெருகி, நிதி நிலைமை சீராகி வருகிறது என்பதில் மக்கள் பூரிப்படைகிறார்கள்.

இவ் வருடம் சிறுவர் நலன் ஆண்டாக இருப்பதால் இவர்களுக்கு இலவசத் தடுப்பு மருந்துகள் கொடுத்து வருவது மிகவும் மெச்சத்தக்க செயலாகும்.

எந்த நேரம் வைத்தியசாலையின் மூடு விழா நடக்குமோ என்ற அச்சம் நீங்கி மக்கள் இப்போது சிறப்பு விழாக் கொண்டாட வேண்டுமெனக் கூறுகிறார்கள் மரம் பட்டு விடுமோ என்ற நிலை மாறி, இப்போது அது துளிர்த்து கொப்புக்கள் விட்டு, விருட்சம் போல வளரத் தொடங்கி விட்டது. இவ் வேளையில் வைத்தியசாலைக்கு வித்திட்ட பெரு மக்களின் ஞாபகத்திற்கு விழா எடுத்து அஞ்சலி செலுத்துவது எங்கள் கடமையாகும்.

பல் வைத்தியம், அக்குபங்சர் வைத்திய கலாநிதிகளும் வர இருப்பதையும் எல்லோரும் வரவேற்கிறார்கள். சுருங்கக்கூறின் ஒரே கூரையில் எல்லாச் சிகிச்சைத் துறைக்கும் அமைய இருப்பது பொருத்தமானது.

சில ஆண்டுகளுக்கு முன் இக்கிராம வாசியான புண்ணிய சீலர் அமரர் எஸ். மகாதேவனின் ஞாபகார்த்தமாய், அமரர் என். இராசேந்திரத்தினால் எக்ஸ்றே வைப்பதற்கு அமைக்கப்பட்ட சிறந்த கட்டிடம். அக் கருவி வைக்காமல் இன்று வெறுமையாயிருக்கிறது. சபைத் தலைவர் இந்தக் கருவியை அரசாங்க உதவியுடன் அமைக்க எடுத்து வரும் முயற்சி அரும்பெரும் சேவையாகும். சென்ற சில ஆண்டுகளில் சேமிப்பிலிருந்த பணம்விரயமான துமல்லாமல் கட்டிடம்தண்ணீர் சேவை முதலிய எல்லாப் பகுதிகளிலும் திருத்த வேலைகள் நடைபெறவில்லை. இவற்றை எல்லாம் சீர் அமைக்க யாழ் குடா நாட்டு மக்களும், ஏனையோரும் சிறுதுளி பெருவெள்ளம் என்ற வாக்கின்படி, உதவி புரிய முன்வரவேண்டும். நிதி நிலைமை திருந்திய பின், மக்களுக்கு மேலும் நன்மை ஏற்படும் வகையில் கட்டணங்கள் குறைக்கப்பட்டு சிறந்த சேவையும் ஆற்ற நிர்வாகம் முயற்சி செய்வது இவர்களின் தலையாய கடமையாகும்.

மூன்றுபேர் அடங்கிய இச் சபையின் உற்சாகத்தால் வைத்தியசாலை முன்னேறி வரும் வேளையில், பல எலி புற்று எடாது என்ற வாக்குக்கு இணங்கவும் அரசாங்க அதிபர் கூறியவற்றை நினைவில் கொண்டு செயல்பட வேண்டும். அதாவது 35 பேர் கொண்ட நிர்வாக சபை 9 ஆகக் குறைக்கப்பட்டால் மட்டுமே, நிர்வாகம் திறம்பட இயக்க முடியும் என்பது தான் அவரின் கருத்தாகும் ஆனதால் உபவிதிகளை திருத்தம் செய்து சிறு நிர்வாக சபை அமைப்பதுதான் சாலச் சிறந்த ஒரு வழியாகும் அங்கத்தவர் அனைவரும் இதை மனதில் கொண்டு செயல்படுவது பெரும் சேவை ஆகும்

இ. மு. அருணசலம்
[சமாதான நீதவான்]
சித்தன்கேணி


# மேசன் வேலைக்கான சீமெந்து



## அதிக பட்சி

### மேசன் வேலைக்கான சீமெந்து

★ வேலை நயம்
★ குழைமம்
★ ஒட்டுந் தன்மை

மனை நிர்மாணத்துறையில் ஒரு நவீன அம்சமாகும். இது சிக்கனமானது, மலிவானது. அமெரிக்க சீமெந்துச் சங்கத்தின் நுணுக்கமான தர நிர்ணயத்துக்கு அமைவானது. இதனை போர்ட்லண்ட் சீமெந்தைப்போலவே பாவிக்கலாம். சீமெந்து / மணல் விகிதாசாரம் போர்ட்லண்ட் சீமெந்துக்குப் போலவேயாகும்.

மேசன் வேலைக்கான சீமெந்தைக் கொண்டு கட்டிடச் செலவைக் குறையுங்கள்

● கொங்கிறீட் வேலைக்கு பயன்படுத்தப்படுவதற்கல்ல.

மேசன் வேலைக்கான சீமெந்தின் விலை 50 கி கிரும் பை

புத்தளம் அல்லது காங்கேசன்துறை தொழிற்சாலையிலிருந்து ரூபா 14/90

காலி தொழிற்சாலையிலிருந்து ரூபா 17/80

## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்,

தபால் பெட்டி - 1382, சுதந்திர சதுக்கம்,
கொழும்பு—7. தொலைபேசி: 95628 95801—4

# ரொடீஷியாவில் 6 ஆண்டுகளில் 15 ஆயிரம் பேர் பலி!

## இவ்வாண்டில் மட்டும் 3 ஆயிரம் பேர்

சாலிஸ்பரி, மே 31

ரொடீஷியாவில் ஆறு ஆண்டுகளாக தொடர்ச்சியாக நடைபெற்று வரும் கலவரங்களினால் இதுவரை 15 ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என சாலிஸ்பரி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டின் முதல் 5 மாதங்களில் மட்டும் அங்கு நடைபெற்ற கலவரங்களினால் 3 ஆயிரம் பேர் பலியாகின என்றும் அறிவிக்கப்பட்டது.

ரொடீஷியாவின் வடபகுதியில் கொரில்லாக்கள் நடத்திய தாக்குதலில் 4 கறுப்பு இனத்தவரும் ஒரு வெள்ளையரும் பலியாகினர் என்றும் பாதுகாப்பு படையினர் நடத்திய எதிர்த்தாக்குதலில் 13 கொரில்லாக்களும் 3 ஆதரவாளர்களும் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது. [இ]

## ஆண்டு விழா

(அரியாலை)

யாழ். பரியோவான் கல்லூரி பழைய மாணவர் சங்க எழுபத்தைந்தாவது ஆண்டுவிழா இன்றும் நாளையும் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

காலை நன்றி தெரிவிக்கும் ஆராதனையுடன் ஆரம்பமாகும் இவ்விழா நாளை சனிக்கி

[6ம் பக்கம் பார்க்க]

## 130 வீடுகள் தீயிடப்பட்டன

சென்னை, மே 31

தென்ஆற்காடு மாவட்டத்தில் இருவருக்கு இடையேயான தகராறு கோஷ்டி மோதலாகி அதன் காரணமாக 130 வீடுகள் தீயிடப்பட்டுள்ளன.

இம்மோதலின்போது பொலிசார் கூட்டத்தைக் கலைக்க கண்ணீர்ப் புகைப்பிரயோகம் செய்தனர். வீடுகள் தீயிடப்பட்டதனால் 3 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதாம்.

இது தொடர்பாக 28 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## பகதூர்தாப்பா நேபாளத்தின் புதிய பிரதமர்

காட்மாண்டு, மே. 31

நேபாளத்தின் புதிய பிரதமராக திரு. சூரியபகதூர் தாப்பா மன்னர் பிரேந்திராவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பஞ்சாயத்தின் பொரிசின் பேரிலேயே திரு. தாப்பா நியமிக்கப்பட்டார். [இ]

## இன்று

(யாழ்ப்பாணம்)

கொட்டடி நமசிவாய வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சங்க அங்குரார்ப்பணவைபவமும், அனைத்துலக சிறுவர் வருட இறுதிவிழாவும் இன்று மாலை மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவிற்கு கல்லூரி அதிபர் திரு த. ஆறுமுகம் தலைமை தாங்குவார். [கெ]

0 0 0

[யாழ்ப்பாணம்]

வண்ணார்பண்ணை கிழக்கு ஒழுங்கை ஸ்ரீ மகாமாரி அம்பாள் கோவில் அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள்வரை நடைபெறும். தினமும் மாலை 6 மணிமுதல் 7 மணி வரை தமிழ்மணி எஸ். கணேசசுந்தரன், செல்வி ஸ்ரீபாலமனோகரி கணேசசுந்தரத்தின் பக்கவாத்திய சகிதம் கதாப்பிரசங்கம் செய்வார். [கெ-இ]

தமிழ்ப் பிரதேச அபிவிருத்தியில் எமக்கு அக்கறையுண்டு

# நாட்டைத்துண்டாடுவதற்கு அனுமதிக்கமாட்டோம்

## மெலிஞ்சிமுனையில் பிரதி அமைச்சர்

[யாழ்ப்பாணம்]

"தமிழ்ப்பிரதேசங்களின் அபிவிருத்தியில் அக்கறைகொண்ட நாம் நாட்டைத் துண்டாடுவதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்."

இவ்வாறு ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் இளைஞர் வேலைவாய்ப்புப் பிரதியமைச்சர் திரு. காமினி அத்துக்கோரளை மெலிஞ்சிமுனைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

மேற்படி வைபவத்திற்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் சடாச்சரம் சண்முகதாஸ் தலைமை தாங்கினார்.

மெலிஞ்சிமுனை கிராமத்திலிருந்து இளைஞர்சங்க மண்டபம் வரை இளைஞர் விவகார வேலைவாய்ப்பு பிரதியமைச்சர் காமினி அத்துக்கோரளை, யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளர் யோகேந்திரா துரைசுவாமி, இளைஞர் தேசிய வேலைவாய்ப்பு இயக்குனர் திரு கனகசூரியர், யாழ் மாவட்ட இளைஞர் வேலை வாய்ப்பு அதிகாரி திரு ஏ நீலகண்டன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் சடாச்சரம் சண்முகதாஸ் ஆகியோர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

பிரதியமைச்சர் தொடர்ந்து பேசுகையில், தமிழ்மக்கள் வாழும் பகுதியின் அபிவிருத்தியில் அக்கறை காட்டாத தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நாட்டைப் பிரிப்பதற்கு மட்டும் முன்னிற்கிறார்கள்.

யாழ் மாவட்டத்தின் அபிவிருத்திக்காக ஒருகோடி ரூபாவை எமது அரசு ஒதுக்கியிருந்தது. அப்பணத்தைநாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த உங்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் தவறிவிட்டனர். அதனால்தான் நான் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இங்கு வருகை தந்துள்ளேன். இந்த விஜயத்தின்போது மக்களின் தேவைகளை அறிய முடிந்தது. மெலிஞ்சிமுனை மக்களால் சமர்ப்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தைக்கூடிய சீக்கிரம் பூர்த்தி செய்து தருவேன் என்றார்.

இளைஞர் தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் நாட்டை அபிவிருத்திசெய்யும் இளைஞர்களுக்கு நாளொன்றுக்கு ஐந்து ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது. ஏழு ரூபா ஐம்பதுசதம் சம்பளம் வழங்குவதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம். வெகுவிரைவில் இது வழங்கப்படும்.

ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் இருபத்திஐந்து இளைஞர்கள் தேசிய இளைஞர் வேலைவாய்ப்பு இயக்கத்தில் சேர்ந்து தமது கிராமத்தை முன்னேற்றக் கிடசங்கற்பம் பூணுவார்களேயானால் இன்னும் மூன்று வருடங்களில் இந்த நாட்டை முன்னேற்றுவதோடு இளைஞர்களின் வேலைவாய்ப்பின்மையையும் போக்கமுடியும் என்று பிரதிஅமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து, வளர்ந்து தமிழ்மக்களின் அடிப்படைத் தேவைகளை நன்கு உணர்ந்த ஒருதமிழ்ப் பெரியாரை யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளராக நியமித்துள்ளோம் என்று குறிப்பிட்ட பிரதிஅமைச்சர்திரு யோகேந்திரா துரைசுவாமி சிறந்த ஒரு நிர்வாகி அவரின் சிறந்த நிர்வாகத்தின்கீழ் யாழ் மாவட்டம் முன்னேற்றப்பாதையில் செல்லும் என்பது திண்ணம். அதேபோல் எமது அமைச்சு ஒரு இளைஞரான திருநீலகண்டனை இளைஞர் வேலைவாய்ப்பு அதிகாரியாக நியமித்துள்ளது. அவர் இளைஞர்களின் தேவையை நன்குணர்ந்து செயலாற்றுவார் என்றும் கூறினார். [கொ]

## அராலி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சரித்திர வரலாறாக அறிகின்றோம். அங்ஙனம் படையெடுத்துவந்த தமிழக மன்னர்கள் திருவடி நிலைத்துறையில் இறங்கிச் சோழிய புரத்தில் [சுழிபுரம்] தங்கி அராலி அம்பாள் சந்நிதியில் துர்க்கா வேள்வி நடாத்தி வணங்கிச் சுபநேரத்திற் போருக்குச் செல்வார்கள் என்று கதை.

அதே விழாமுறைதான் பல்லாண்டு காலமாக இத்தலத்தில் நடைபெற்று வருகின்றது. மடைபரப்புத் தளத்துக்கு முன்னுள்ள தம்பத்தில் சிங்கக்கொடியேற்றி விழா வருடந்தோறும் வைகாசி விசாகமுதல் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து 8 நாட்களுக்குச் சிறப்பான முறையில் விழா நடைபெறும். இவ்வருட உற்சவம் இன்று ஆரம்பமாகிறது. 8 ஆம் நாள் அம்பாள் ஊர் சுற்றி வரும் காட்சி அற்புதமானது. அன்று இக் கிராமவாசிகள் தத்தம் இல்ல வாசலில் மடைபரப்பி அம்பாள் தரிசனம் செய்து மகிழ்வார்கள். 9-ஆம் நாள் சனிவாரம் காலை வேள்வி விழா நடைபெறும்.


விவசாயிகளுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

# "அம்புஷ் 25"

கிருமிநாசினி மூலம் வெங்காயத்தில் பச்சைப்புழுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்தல்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெங்காயத்தில் பச்சைப்புழுத்தாக்கம் (SPODOPTERA) மிகவும் மோசமாக உள்ளது. அதற்குத் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் உடனே எடுக்காவிடில் உங்களது முழுப்பயிரும் நாசமாகிவிடும்.

வெங்காயம் முளைத்த நாளில் இருந்து "அம்புஷ் 25" விசிறுங்கள். தொடர்ந்து 30 நாட்களுக்கு 5 நாட்கள் இடைவெளியில் விசிறுதல் வேண்டும். 30 நாட்களின் பின்னர் 14 நாட்கள் இடைவெளியில் விசிறல் வேண்டும்.

அம்புஷ் 25 பச்சை புழு முட்டைகளை அறவே அழிக்க வல்லது. ஆகவே நீங்கள் தாமதியாது அம்புஷ் 25தை விசிறுங்கள். ஒரு அவுன்ஸ் அம்புஷ் 25 மருந்தை 10 கலன் நீரில் கலந்து பாவிக்கவும். இக்கலவையுடன் ஏதாவது ஒரு ஒட்டும் தன்மையுடைய மருந்தினையும் கலந்து விசிறவும். ஒரு கலன் கலவையுடன் ஒரு அவுன்ஸ் ஒட்டும் மருந்தினைக் கலக்கவும்.

"அம்புஷ் 25" மருந்தினை மாத்திரமே பாவியுங்கள். வேறு எவ்வித கிருமிநாசினிகளுடனும் கலக்க வேண்டாம். அம்புஷ் 25தை அதிகாலையிலோ அல்லது மாலையிலோ விசிறவும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள் :

CIC

கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்,
த. பெ. இலக்கம் 352,
கொழும்பு - 1.

**வெஸ்லி**
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
ராஜன் - பானுமதி
**பத்துமாதபந்தம்**

**Rio** (Jaffna) Phone : 7667
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
**Mistress Pamila**
(Adults only)


## சாம்பியன்

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய பாடசாலைகளுக்கிடையே கல்வித்திணைக்களம் நடத்திய ஆண்கள் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அமெரிக்கன்மிஷன் நாவற்குழி மகாவித்தியாலயத்தைத் தோற்கடித்து சாம்பியன் பட்டத்தைத் தட்டிக்கொண்டது. அமெரிக்கன்மிஷன் வோஷ்டிக்குரி. அருள்காந்தமூர்த்தி தலைமை தாங்கினார்.

7 பாடசாலைகள் கலந்துகொண்ட இச்சுற்றுப்போட்டி யாழ். திருக்குடும்ப கன்னியர் மடப்பாடசாலையில் நடைபெற்றது. [இ]


**ராஜா** (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா, சௌகார்ஜானகி நடித்த
**ஒளிவிளக்கு**
வண்ணக் கலர் புதிய பிரதி

**REGAL** (Jaffna) 3nd CROWDED WEEK
Daily 4-30, 7-00 & 9-10 p.m. only
**PERCY'S PROGRESS**
(Color) (Adults Only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

**ராணி** (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
டொன் பொஸ்கோ கார்ஞ்சனு செல்வசேகரன் ஜவாகர்
இன்னும் பலர் இறம்பட நடித்த
**எங்களில் ஒருவன்**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) போன்: 2-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30 & 9-45
எம் ஜி. ஆர். — சாவித்திரி
**வேட்டைக்காரன்** (புதிய பிரதி)

**லிடோ** (யாழ். நகர்) போன்: 7898 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — சரோஜாதேவி
**என் தம்பி**

**மனோகரா** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி ரங்கராவ் நடித்த
**தெய்வத்தின் தெய்வம்**
[புதிய பிரதி]
டைரக்ஷன்: கே எஸ் கோபால கிருஷ்ணன்

4-வது வெற்றி இறுதி வாரம்!
**சாந்தி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இராஜேந்திர குமார் — ஹேமமாலினி — பாலுரேகா
**"கோரா அவுர் காலா"** ஹிந்தி கலர்
யாழ்நகரில் இப்படம் இதுவே கடைசித்தடவை

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் - தேவிகா கல்யாணகுமார் நடித்த
**நெஞ்சில் ஓர் ஆலயம்**
[புதிய பிரதி]

23-வது வாரம்
**வின்சர்** (யாழ்ப்பாணம்) போன்: 400
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
**பைலட் பிரேம்நாத்**
(வண்ணக் கலர்)


# இன்றைய பலன்

வைகாசிமாதம் 18-ம் திகதி வெள்ளிக்கிழமை

(1-6-1979)

**மேடம்:** கடமையில் புதிய அனுபவம் பிறக்கும். எதையும் சிறப்புடன்செய்வதற்கு விரும்புவீர்கள். ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும். சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம். கலைஞர்களுக்கு நல்லதினம்.

**இடபம்:** இன்று அதிக ஆதாயம் கிடைக்கும். புதிதொழில் முறைகளை மனம் நாடும். நீண்ட பிரயாணத்திற்கும் இடமேற்படலாம்.

**மிதுனம்:** நத்தை வேகத்தில் காரியங்கள் நகர்ந்து கொண்டிருக்கும். மனத்தளர்ச்சியேற்படுவது தவிர்க்கமுடியாததாகும். வேண்டாத தொடர்பால் தவறுன போக்குக்கும் இடமுண்டு.

**கடகம்:** ஆசை வார்த்தைகளின் மூலம் உலகளிடமிருந்து அசப்பட்டதை சுருட்டுவதற்கு சிலர் முனைவார்கள். இனந்தெரியாத வேதனையால் தாக்கப்படுவீர்கள். நிதானம்விரும்பத்தக்கது.

**சிங்கம்:** சொற்சிலம்பமாடுவதில் இன்று முன்னிலையில் நிற்பீர்கள். சொகுசான வாழ்வுப் கிடைக்கும். பிறருடைய மதிப்புக்கும்இலக்காகுவீர்கள். வரவேற்க வேண்டியதினம்.

**கன்னி:** உண்மை இன்று ஊமையாகிவிடும். உதவி செய்யச்சென்று உபத்திரவத்தை விலைகொடுத்து வாங்குவீர்கள். சிலர் வாழ்க்கையில் பணமுடை அதிகரிக்கலாம். செலவுவகைகளை கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

**துலாம்:** நல்லதைச் செய்வீர்கள். நலன்பெருகும். பிரமுகர்கள் உங்களைத்தேடிவருவார்கள். சமூகத்தில் மதிப்பு உயரும். அரசியல்வாதிகள் அதிர்ஷ்டதேவதைகளை அணைத்துக் கொள்வர்.

**விருச்சிகம்:** இதயத்தில் அமைதி குன்றும். குடும்பத்தில் சிறிய பூசல்கள் தோன்றி மறையும். குழந்தை ஒன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். சிறிய விடயத்திற்கும் அதிக கோபம் தோன்றக்கூடும்.

**தனுசு:** இதயம் எரிமலையாகும். எதிரிகள் தாக்குவர். ஏமாற்றத்திற்கு இடமுண்டு. எனினும் இருள் சூழ்ந்த நிலையிலும் ஒளிக்கோடுகள் தென்படலாம். அதிக பேச்சைத் தவிர்த்துகாரியத்தில்கண்வைக்கவும்.

**மகரம்:** களஸ்திர வழியால் நன்மைகள் வந்துசேரும். குடும்பத்தில் தென்றல்வீசும். கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளை ரசிப்பில் காலத்தைக் கடத்துவீர்கள். செலவினங்கள் கட்டுபடியாகவே இருக்கும்.

**கும்பம்:** திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும். இடுத்துக்கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர். கடற்றொழிலாளர்கள் கவனம் செலுத்தவும். சிலருக்கு நூதனரோகம் தென்படலாம்.

**மீனம்:** தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். சுற்றாடலில் மதிப்பு உயரும். புண்ணிய ஸ்தலம் ஒன்றுக்கு யாத்திரை மேற்கொள்ளப்படலாம். தெய்வத்தின் துணையுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 4-5, 7-00, 9-45
DOMION PRINCIPLE


# சிறுவர் உரிமை......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோரின் பொறுப்பிலும் பாதுகாப்பிலும் வளரவும்.

[7] தனித்துவமான தமது திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு சமவாய்ப்புக்களும், சுதந்திரமான கல்வியும் பொழுதுபோக்கும் கிடைக்கவும்.

[8] பேரழிவுகளின்போது உடனடி பாதுகாப்பும் நிவாரணமும்.

[9] சகலவிதமான புறக்கணிப்புகள் கொடுமைகள் சுரண்டல்களிலிருந்தும் பாதுகாப்பும்.

[10] இன, சமய, அல்லது வேறு பாரபட்சங்களிலிருந்தும் பாதுகாப்பு. அமைதி உணர்வும், உலகளாவிய சகோதரத்துவமும் நிலவும் சூழ்நிலையில் வளரவும்; ஆகிய 10 முக்கிய அம்சங்களை இப்பிரகடனம் வலியுறுத்துகின்றது.

## யுனிசெஃப் நிறுவனம்

2வது உலக யுத்தத்தின் காரணமாக அழிவுக்குள்ளான ஐரோப்பிய நாடுகளில் துன்பத்துக்குள்ளான குழந்தைகளுக்கு உதவுவதற்காக 1946ம் ஆண்டு 'யுனிசெஃப்' (UNICEF) என்று அழைக்கப்படும் ஐ. நா. அனைத்துலக சிறுவர்கள் அவசரகாலநிதி என்ற நிறுவனம் நிறுவப்பட்டது. இது ஒரு தற்காலிக அமைப்பாகவே நிறுவப்பட்டது. ஆனால் உலகில் குழந்தைகளின் பரிதாபநிலை மோசமாகவே இருந்துவருவதை அறிந்த ஐ நா. சபை இந்த நிறுவனத்தை ஒரு நிரந்தர அமைப்பாக்கிக்கொண்டது.

## உலகக் குழந்தைகள்

உலகின் பல பாகங்களிலுள்ள லட்சக்கணக்கான குழந்தைகளினதும் சேமநலனுக்காக இந்த நிறுவனம் இப்பொழுது அவ்வப்பகுதிகளிலேயுள்ள நாடுகளின் அரசாங்கங்களுடன் இணைந்து பணியாற்றிவருகின்றது.

வளர்முகநாடுகளில் இலட்சக்கணக்கான குழந்தைகளுக்கு சாதாரண வாழ்க்கைக்குத் தேவையான வசதிகள்கூட கிடைப்பதில்லையென்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. இந்த நாடுகளில் 58வீதத்தினரே ஆரம்ப, உயர்கல்வி நிலைகளுக்குப் போகக்கூடிய வசதியுள்ளவர்களாய் உள்ளனர். 9 வீதத்தினரே மேற்கல்வியைப்பெறுகின்றனர். தொழில்வளர்ச்சி நாடுகளில் இந்த விகிதாசாரம் 79 வீதமாகவிருக்கின்றது.

## பயனுண்டா?

இந்த நிலைமையில் சிறுவர்கள் ஆண்டும், சிறுவர்கள் வாரமும் கொண்டாடப்படுவதானால் உலக சிறுவர்களின் துன்பங்களைத் துடைத்து விட முடியுமா என்ற கேள்வி எழுகின்றது.

ஏன் நம் நாட்டிலேயே சிறுவர்களில் பெரும்பாலானவர்கள் தமது அன்றாட தேவைகளைப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்தச் சிறுவர்களின் எதிர்காலநலனுக்கு ஆக்கரீதியாக திட்டமிட்டுசெயல்படாத பட்சத்தில் அவர்களின் எதிர்காலம் பிரகாசமடையமுடியாது. இன்று நாட்டின் முன்னேற்றத்துக்கு என்னதான் பாரியதிட்டங்கள் தீட்டப்பட்டாலும் அந்தத்திட்டங்களின் சொந்தக்காரர்களாய் இருக்கப்போகும் வருங்காலச்சந்ததியினரின் சுதந்திரமான வளர்ச்சிக்கும், அறிவு விருத்திக்கும் ஏற்ற வழிகளையும் ஏற்படுத்தியாகவேண்டும். இல்லையெனில்சமூகத்தில்தொடர்ந்து ஏற்றத்தாழ்வுகள் இருந்துகொண்டேவரும்.

இன்று வீடுகளில் வேலையாட்களாக நிம்மதியற்ற அடிமைகளாய் இருந்துவரும் சிறுவர்களின் விடிவுக்காகுதல் இந்தச் சிறுவர் ஆண்டில் நல்லதொரு செயல்திட்டம் அமுலாக்கப்படும் என்று எதிர்பார்ப்போம்.

சிறுவர் ஆண்டு கொண்டாடப்படும் இந்த வேளையில் நாட்டின் பல பாகங்களிலும் அநாதைகளாகவும், தெருவீதியில் திரியும் போக்கிடமற்றவர்களாகவும், விடுதிகளிலும் மில்வாடிகளிலும் அடிமைகளாகவும் இருந்துவரும் சிறுவர்களைப் பற்றிய ஒரு கணிப்பீட்டைச் செய்து, அதன் மூலம் இச்சிறுவர்களுக்கு மீட்சியை ஏற்படுத்த நமது அரசும் அரசியல் கட்சிகளும் முற்போக்கு இளைஞர்களும் முன்வருவார்களாகில் எதிர்காலச்சந்ததிக்கு அளப்பரிய சேவையொன்றைச் செய்தவர்களாவார்கள்.

இதனால்சிறுவர் ஆண்டு கொண்டாடப்படுவதற்கு ஒரு அர்த்தத்தை ஏற்படுத்துவதுமட்டுமில்லை, இதற்கான ஒரு இனத்தை உருவாக்கியவர்களுமாவோம்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மல்லாகம் காலஞ்சென்ற செல்லத்துரை செல்வமகேஸ்வரன் பெண் லலிதாம்பிகையின் மரண சாதனம் எழுதப்படாத சொத்துக்கள் சம்பந்தமாக காலஞ்சென்றவர்

மரணசாதன நியாயாதிக்கம் T / 3338

கோண்டாவில், கோண்டாவில் கிழக்கு, தற்பொழுது பெனேஸ்ரேட், நைஜீரியா செல்லத்துரை செல்வமகேஸ்வரனின் தத்துவகாரன் சின்னப்பு செல்லத்துரை.

விண்ணப்பதாரி.

எதிராக

1. மல்லாகம் செல்வமகேஸ்வரன் மகள் நரேந்திரா.
(பராயமற்றவர்)

2. மல்லாகம் தம்பையா முத்துக்குமாரு பராயமற்ற 1-ம் பிரதிவாதியின் சட்டப்பாதுகாவலராக

பிரதிவாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொகுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம் திகதி முற்பகல் 10 மணிக்கு இந் நீதிமன்றத்தில் முன்னாதோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி

(ஒப்பம்)

பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்

இன்று 1979-ம் ஆண்டு மே மாதம் 29ம் திகதி.

தயாரித்தது:
பொ. நவரத்தினம்
விண்ணப்பதாரியின் சட்டத்தரணி. 2613

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# சமய உணர்வும், பற்றும் மறுமலர்ச்சிக்கு வித்தாகும்

## சேக்கிழார் விழாவில் பேராசிரியர் சிங்காரவேலனார்

[யாழ்ப்பாணம்]

"சைவர்களாகிய நமக்கு சமய உணர்வும், சைவப்பற்றும் அவசியம் வேண்டும். இவைதான் சமய உயர்வுக்கும் மறுமலர்ச்சிக்கும் வித்தாகும். இது தமிழ்நாட்டவர்களும், ஈழத்தவர்களும் உணர வேண்டியதொன்றாகும்".

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் சட்டத்தரணி த. சோமசுந்தரம் தலைமையில் இடம்பெற்ற சேக்கிழார்விழாவில் பேராசிரியர் சோ. சிங்காரவேலனார் கூறினார்.

சேக்கிழார் விழாவினை சிறப்பிக்கும்பொருட்டு தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்த செஞ்சொற்கொண்டல், திருமுறைச்செம்மல் பேராசிரியர் சோ. சிங்காரவேலனார் தமது உரையில் தொடர்ந்து கூறியதாவது:

நூல்களைப் படிக்க ஆற்றல் வேண்டும். ஆற்றல் என்றால் எடுத்துக்கொண்ட பொருளில் தன்னை ஏற்று ஈடுபடுவதாகும் இதையே வல்லமை தேவை என்கிறார்கள். சேக்கிழார் பெருமானுக்கு இந்த வல்லமை இருந்தது. அதனால்தான் ஒரு சித்திரைத் திருவாதிரையில் தொடங்கி மறுசித்திரைத்திருவாதிரைவரை பெரியபுராணத்தை ஓத சோழமன்னன் கேட்டிருந்தான். இன்று நாம் அந்தச் சேக்கிழார் பெருமானுடைய திருவுருவப்படத்தைப் பார்க்கிறோம். ஆனால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அவர்காலத்தில் அவரோடு வாழ்ந்தவர்கள் அவரை நேரிலே தரிசிக்கின்ற பாக்கியத்தைப் பெற்றிருப்பார்கள். பெருமானின் திருவாயிலிருந்து நாலாயிரம் பாடல்கள் பிறந்துள்ளன. சமய நூல்களை படிப்பதை நோன்பாகக்கொள்ள வேண்டும். நோன்பு என்பது உணவைக்குறைத்து எமது உடலை வருத்தி உடலுக்கு நல்லதைச் செய்வதாகும்.

தமிழ்நாட்டிலே இன்று புராணபடனம் அருகிக் காணப்படுவது எனக்குக் கவலைதருகின்றது. தமிழ்நாட்டில் நாயன்மார் புராணபடனமும் சேக்கிழார் புராணபடனமும் வீடுகளில் மட்டும் நடைபெறுகின்றன. ஆனால் இங்குள்ளது போன்று பொதுவான அரங்கிலே புராணபடனம் நடப்பது மிகக்குறைவு. பலருக்கு படனம் என்ற சொல்லுக்கே பொருள்தெரியாது.

### ஓதுவது என்பது...

ஓதுவதென்பது படித்தலுக்கு வேறுபட்டது. நாம் வேறாய்ப்படிக்கும் பொருள் வேறாய் - நிற்பது படிப்பு. ஆனால் ஓதுதல் என்றபொருளை எங்கே பயன்படுத்துகின்றோம் திருவாசகத்தை ஓதினார் என்று தமிழ்மொழியில் உயர்ந்த நூலைப் படிப்பதை சொல்கிறது 'ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்' என்றும் 'ஓதுவது ஒழியேல்' என்றும் ஔவையார் கூறினார், ஞானசம்பந்தர்கூட 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்று தொடங்கி 'ஓதுவார்' தமை என உயர்வாகச் சொல்லுகின்றார். நேரத்தைப் போக்க நாம் படிக்கின்றோம் - உயிருக்கு உயர்வு தரக்கூடியது ஓதுதல். திருமுறைகளை ஓதுதல் வேண்டும்.

ஞானசம்பந்தர் சொல்கிறார் தனக்குத்தானே சொல்லுவது போலச் சொல்லுகின்றார்.

"ஆசையறாய் பாசம்விடாய்
ஆனசிவபூசை பண்ணாய்
நேசமுடன் அஞ்செழுத்தை
நீ நினையாய் - சீசீ
சினமே தவிராய்.
திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன
வாய்"

'மனமே உனக்கு என்ன வாய் இருக்கிறது" ஆசையை அறுத்தாயா? பாசத்தைத் துறந்தாயா? சிவபூஜையை செய்தாயா? திருவைந்தெழுத்தை ஓதினாயா? என்கேட்கின்றார். சீ சீ சினமே வரவிடா மனமே உனக்கென்ன வாய் அருமையான வெண்பா இட - வெண்பாவுக்கும் புகழேந்தி என்ற புகழேந்தியின் வெண்பாக்களை எல்லாம் தூக்கி எறிந்துவிடுகிறது இந்த வெண்பா ஆசை எல்லாரிடமும் இருக்கிறது. அவரவர் பருவத்திற்கு தக்கமாதிரி மாறுகிறது குழந்தைக்கும், காளைக்கும், கிழவனுக்கும் ஆசையிருக்கின்றது. ஆசை நம்மை விட்டு நாம் இறக்கின்றவரை போகாது அந்த ஆளிற்கு ஆசைக்கு நம்மீது ஆசை. சீவக சிந்தாமணியில் இது அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. செல்வந்தன் ஒருவன் மரணப் படுக்கையிலிருந்து பேசமுடியாதவன் கையை உருட்டிக் காட்டுகிறான். அவன் தான்சேர்த்துவைத்த பொருட்களைப்பற்றிச் சொல்ல அவன் பிள்ளைகளோ அப்பா விளாம்பழம் கேட்டதாக எண்ணி விளாம்பழம் கொண்டுவர ஓடுகிறார்கள், அப்போதுகூட அவனது பொருளாசை போகவில்லை, 'புலனைந்தும் பொறி கலங்கி அறிவழிந்தபோது' என்னபேசமுடியும் எம்வாழ்வு எவ்வளவு என்று யாருக்கும் தெரியாது நூறு வயதுவரை வாழச் சொல்லப்படுகின்றவர்கள்கூட நூறுவயதுவரை வாழ்வதில்லை மனித வாழ்வின் மாண்பே இதுதான். யார் யார் எப்போ எப்போ இறப்பார் என்று தெரிந்தால் மனிதன் செய்யக்கூடாததெல்லாம் செய்வான், எப்போ இறப்போமென்பது தெரியாமலே இவ்வளவு கேடுகள் செய்யும் மனிதன் எப்போது இறப்பான் என்பது தெரிந்தால் இருக்கும்வரை அனுபவிப்போம் என்று என்னவெல்லாமோ செய்வான் இதனால் தான் இறப்பிற்கு அர்த்தம் இருக்கின்றது என்று எண்ணுகிறார்கள்.

தமிழ் நாட்டிலே ஒருவர் திடீரெனச் செத்தால் மாப்பிள்ளைச்சாவு, கலியாணச்சாவு என்று சொல்வார்கள். இறப்பு என்பது அநாயசமாக வருவது. அதனால்தான் சிதம்பரசுவாமிகள் தனக்கு மரணம் "நோயுற்று ஒருநொடிப் பொழுதேனும் பாயிலே கிடவாமல் இந்தப் பாவியேனுடைய காயத்தை மாற்ற ஒரு நொடியில் உயிர்போக வேண்டும் என்று வேண்டினார் இறைவன் எல்லாம் தெரிந்தவராகையால் எதை எப்போது கொடுக்க வேண்டும் என்று தெரிகிறது. எனவே ஆசை கடைசிவரை போகவில்லை. இறக்கப்போகிறவமுன் இறைவன் திடீரெனத் தோன்றின் அவன்கூட இன்னும் கொஞ்ச நாள் வாழ அவகாசம் கேட்பான். காரணம் உலகத்திலே அவ்வளவு பிடிப்பு. இந்தப் பிடிப்பையும் பற்றையும் பாசத்தையும் மெல்ல இறைவன் பக்கம் மாற்றவேண்டும் என்று சைவ சித்தாந்தம் சொல்லுகின்றது. சிவனுக்கும் சக்திக்கும் பாசத்திற்கும் பற்றிற்கும் நடுவில் உயிர் ஊஞ்சலாடுகிறது.

### ஊசலாடும் உயிர்

இதைத்தான் மாணிக்கவாசகர் கயிற்றில் கட்டப்பட்ட ஊஞ்சல் ஒரு முறை ஆடுகின்ற போது மற்றப்பக்கமும் செல்கிறது அதைப்போல்தான் நமதுயிரும் சிவத்திற்கும் பாசத்திற்கும் இடையில் நின்று ஆடுகின்றது என்றார்.

### பாசம்விட...

பாசத்தை விடவேண்டாமா? பாசம் என்றால் பற்றிப் பிடிப்பது என்று பொருள். பாசி பிடித்தால் செங்கல் போட்டால் பாதி போகும். மறுநாள் திரும்பப் பாசிவரும். இதேபோலத் தமிழ்நாட்டில் பல தீர்த்தங்கள் கவனிப்பாரற்று, பச்சைத் தண்ணீராகக் காணப்படுகிறது. நாம் தீர்த்தத்தில் இறங்கி கையால் விலக்கினால் பாசி விலகும். ஆனால் அதைப் பருகமுடியாது. ஏற்கனவே நமக்கிருக்கிற பாசத்தையே போக்க முடியவில்லை அதற்குள் இந்தப் பாசமும் சேர்ந்தால்? இதனால்தான் பண்டைய காலங்களில் திருப்பணிக் கைங்கரியங்களை ஈடுசெய்ய நிலம் கொடுப்பார்கள். புலவர்களுக்கு யானையைப் பரிசாகக் கொடுத்த மன்னரிடம் அந்த யானையோடு மட்டும் நின்றுவிடாது அந்த யானை நிறைவாக பொன்னும் கொடுப்பார்

### பாசத்தை விட......

சைவசித்தாந்தம் இந்த உலகை உணர்ந்து பாடுவதைப்போல் வேறு எந்த தத்துவமும் இல்லை என்று சைவப் பெரியார்கள் சொல்கிறார்கள். பாசத்தை விடவேண்டும் என்றால், வேறு ஏதோ ஒன்றைத் தொடவேண்டும். அதனால் தான் விட்ட குறை- தொட்ட குறை என்கிறார்கள். இந்தத் தொடலும் விடுவதும் தொடர்புடையவை சமயப் பற்றைப் பார்க்கின்றபோது "பற்றுக பற்று அற்றான் பற்றை" என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

### விருந்தோம்புதல் தமிழர் பண்பு

விருந்தோம்பலென்பது தமிழர்களின் நீண்டகால மரபு. சிலப்பதிகாரத்திலேகூட இந்த விருந்தோம்பலின் சிறப்புச் சொல்லப்படுகிறது. "அறவோர்க்களித்தலும், அந்தணர் ஓம்பலும்" என்ற பாடல் மூலம் 'விருந்து எதிர் கோடலை இழந்த என்னை' என கண்ணகி அழுவதாக இளங்கோ அடிகள் சொல்கிறார். திருவள்ளுவர் விருந்தோம்பல் என்ற அதிகாரத்தையே திருக்குறளில் வைத்துள்ளார். பரிமேலழகர்- விருந்து என்றால் புதிது புதிதாக வருபவர்களை உபசரிப்பது என்றார். அதுதான் அறமும் கூட. இளையான்குடிமாறன் விருந்து கொடுத்த பண்பு நமக்கு வருமா? இரவு நேரம் மழை வேறு கொட்டுகின்றது. இந்த நிலையில் மனம் கலங்கிறாரா? அந்த ஓம்பியலை நாயன்மாரின் வாழ்க்கையிலும் காணலாம், குறிப்பாகச் சொன்னால் சினம் வராது நாயன்மார்கள் மனிதர்களாக வாழ்ந்து தெய்வங்களாக உயர்ந்தவர்கள். கோபம் வந்தபோதும் தீய வார்த்தைகளை வாயினால் சொல்லமாட்டார்கள். சமய வாழ்வில் உள்ளவர்களுக்கும் சினம் வரக்கூடாது. [கா]

## ஆண்டு......

[4ம் பக்கத் தொடர்ச்சி]

மை இரவு நடைபெறும் விருந்துடன் முடிவடையும். இவ்விழாவில் பழைய மாணவர்களுக்கும் தற்போதைய மாணவர்களுக்குமிடையே உதைபந்தாட்டம், கிரிக்கட், பந்தாட்டம், கடைப்பந்தாட்டம் என்பன நடைபெறும். நாளை பிற்பகல் பழைய மாணவர் சங்க வருடாந்தக் கூட்டமும் நடைபெறும். (வ)

## மரண அறிவித்தல்

சரவணை நெடுந்தீவு உடையார் குமாரசாமியின் அன்பு மனைவி ஞானரத்தினத்தின் பூதவுடல் இன்று 1-6 79 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு நல்லடக்கத்திற்காக உரும்பிராய் "அனிஸ்வில்லா" இல்லத்திலிருந்து கோப்பாய் சென்மேரிஸ் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். 2626

# அமைச்சர் ஹேரத்தின் இன்றைய நிகழ்ச்சிகள்

[யாழ்ப்பாணம்]

உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ள உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத் இன்று காலை 9-45 மணிக்கு யாழ். கச்சேரியில் நடைபெறும் மகாநாட்டில் கலந்து கொள்வார்.

இன்று காலை 8-30 மணிக்கு அமைச்சர் ஹேரத் ஸ்ரீ நாக விகாரைக்கும் 9-30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கும் சென்று வழிபட்ட பின் கச்சேரியில் நடைபெறும் மகாநாட்டில் யாழ் மாவட்ட அமைச்சர் ஜனாப் மன்சூர், மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, யாழ். மாவட்ட எம். பிக்களும் கலந்து கொள்வர்.

காலை 11-30 மணிக்கு கச்சேரியிலுள்ள யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி அலுவலகத்திற்கும், 12-15க்கு உதவி கூட்டுறவு ஆணையாளர் காரியாலயத்திற்கும் செல்வார்.

மாலை 2-30 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், கடற்றொழில் சங்கங்களின் தலைவர்கள். நெல் சந்தைப்படுத்தும் திணைக்கள உத்தியோகத்தர்கள், உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி, கூட்டுறவு உதவி ஆணையாளர் அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் கொண்ட மாநாட்டில் அமைச்சர் கலந்து கொள்வார். [கு]

## எதிர்க்கட்சி—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ப்பவிரும்புவதாக அறிகிறேன். அவ்வாறாயின் அக்குழுவில் எதிர்த்தரப்பினரும் சமமான பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் இல்லையெனில் அது நேரத்தை வீணாக்கும் முயற்சியாகவேஇருக்குமென்று அவர் தமது தந்தியில் கூறியுள்ளார்

இத்தந்தியின் பிரதி எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ம)

## பாகுபாடின்றி—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நவரத்ன என்கிறோம்- இந்த 'ம்' மில் என்ன இருக்கிறது? திரு. நவரத்தினம் எனது சிறந்த நண்பர். அண்மையில் அவர் கடுமையான சுகவீனமுற்றிருந்தார். நீங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள் கஷ்டப்பட்டு உழைக்கவேண்டாம். உங்கள் பகுதிகளை நாம் கவனிக்கிறோம் என்றார் ஜனாதிபதி.

இந்த அரசாங்கம் முழுநாட்டையுமே ஆட்சி புரிகின்றது. என்னிடம் வாருங்கள் உங்கள் கஷ்டங்களை நான் தீர்த்து வைக்கிறேன்; உங்கள் கஷ்டங்கள் எமக்குத் தெரியும், அவைகளைத் தீர்த்துவைக்க சகல முயற்சிகளும் எடுத்துவருகின்றோம் என்று திரு. ஜயவர்த்தனா கூறினார்.

நாடு முழுவதையும் அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினர் தொகுதிகளையும் அபிவிருத்தி செய்வோம்.

ஏனைய நகராட்சி மன்றத் தேர்தல்களும் நடைபெற்று முடிந்தபின் மாவட்ட அமைச்சர்களின் தலைமையில் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் நிறுவப்படும். விகிதாச்சார தேர்தல் முறையில் குறைகள் இருப்பின் அவை திருத்தப்படும் என்று ஜனாதிபதி கூறினார். [ம]

## இன்று

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோவில் வருடாந்த உற்சவம் இன்று பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும். கொடியேற்றத்தைத் தொடர்ந்து கொடிஸ்தம்ப புனருத்தாரண நிதி வைபவத்தை வர்த்தகப்பிரமுகர்களான திரு சின்னத்துரையும் மில்க்வைற் அதிபர் க. கனகராசாவும் ஆரம்பித்துவைப்பார்கள். [இ]

[யாழ்ப்பாணம்]

சிறுவர் ஆண்டு விழாவும் நூலக தினமும் இன்று பிற்பகல் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் நடைபெறுகிறது.

அதிபர் திரு. மு. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பேராசிரியர் கா. இந்திரபாலா சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

விரிவுரையாளர் திரு. மு. நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் "இன்றைய குழந்தைகளின் முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகிப்பது வீடா சூழலா?" என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக மாணவ மாணவிகள் கலந்து கொள்வர்.

பல்துறைக் கண்காட்சியும் நடைபெறும் வித்தியாலய மாணவர் தேர்ச்சிச்சங்கம் விழாவை ஒழுங்கு செய்துள்ளது. [இ]

## யாழ். புதிய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னத்தினாலும் மற்றும் மாநகராட்சிமன்ற ஊழியர்களாலும் உத்தியோகபூர்வமாக வரவேற்கப்பட்டு அழைத்துச் செல்லப்படுவார். பின்னர் தமது கடமையை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்வார்.

மாலை 3-00 மணிக்கு புதிய முதல்வருக்கு யாழ்ப்பாணம் சாந்தையர்மடம் விநாயகர் ஆலய முன்றலில் வண்ணார் பண்ணை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வரவேற்பளிப்பர் அங்கிருந்து அவரது இல்லம்வரை மேயர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்.

## மரண அறிவித்தல்

### ஆர். வெங்கட்ராமையர்

போக்குவரத்துச்சபை ஒய்வு பெற்ற லிகிதர் வெங்கட்ராமையர் காலமானார். கிரியைகள் இன்று வெள்ளி 1-6-79 மாலை ஊரெழுவில் நடைபெறும், இவ்வறிவித்தலை நண்பரும் உறவினரும் ஏற்றுக்கொள்ளவும். வைத்தியநாதக் குருக்கள், [2631

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No. 49. Telegrams: Eelanaadu [illegible] 889.